839

ஓம் பரப்பிரமணேநம:

சர்வசமய சமரஸ சன்மார்க்க சதாசாரம்

சமரஸம்

ஓர் சிறந்த தமிழ் மாதாந்த பிரசுரம்.

Vol. 1. | மார்ச்சு ௴ | Book [illegible]

OFFICE OF THE REGISTRAR … MADRAS
No.
10 AUG 192[illegible]

அகக்கண்ணாடி.

1. கடவுள் வணக்கம்.
2. சமூகஞானம்.
1. வீண்பக்தி
உண்மை
தர்மம்
அணில்கதை
காந்தி சரித்ம்
நவநீதம்
2. வர்த்தமானம்
3. ஆத்மசக்தி.

வருடச்சந்தா } உள் நாடுகளுக்கு ரூ 1—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

Edited & Published by:-
M. A. Varadaraja Mudaliar.

S. R. V. Press Villupuram

சமரஸம்.

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள்என்னிடத்தில் வாருங்கள் உங்களுக்கு இளைப்பாருதல் தருகிறேன் என்று ஓர் குருநாதன் சொல்லியிருக்கிறாரல்லவா! அதுபோல் நீங்கள் பிழைக்கும் வழிகளை தேடிக்கொள்ள வேண்டுமானல் நமது சமரஸத்துக்கு சந்தாதாராக சேருங்கள்.

உண்மை தத்துவங்களை விளக்கிகாட்டும் கல்வி கைத்தொழில் சுகாதாரம், விவசாயம், வர்த்தகம், வைத்தியம், முதலிய வியாசங்கள் வெளியாகும் சோப், காயம், கர்பூரம், மெழுக்குவத்தி, வாசனை, அத்தர்கள் எண்ணெய்கள், வார்ணஸ்யெண்ணெய் முதலிய 1000 ஜர்மெனி கைத்தொழில் முறைகள் வெளியாகும்.

உங்கள் வியாபாரத்தை பெருக்கிக்கொள்ள விரும்புகிரீர்களா?

அதற்கு பலநாடுகளுக்கும் பகிரங்கப்படுத்த ஏஜண்டுகள் பல பேர்வேண்டும், பிரயாணச்சிலவு அதிகம்அநேக நாட்கள் செல்லும். அதிக முதல் அவசியம் சந்தடியில்லாமல் இந்தியா, சிலோன், பர்மா முதலிய பலவிடங்களுக்கு மாத மாதம் பிரயாணம் செய்கிறவள் யார்? நமது "சமரஸ தேவியே" 4000 காப்பிகள் பதிப்பிக்கப்படுகின்றன. 1 பக்கம் ஒன்றுக்கு ரூ. **5** தான் ½ பக்கத்துக்கு ரூ. **3.** 1 புத்தகம் 10 பேர் வாசிக்கிறதாக 40,000 பேர் வாசிக்கின்றார்கள். 1 பக்கம் 1-க்கு கால் பைசாதான் சிலவு ஆகிறது. உடனே நமது சமரஸம் பத்திரிகைக்கு தங்களது விளம்பரத்தை யனுப்பக் கோருகிறேன்.

முன்பணத்தோடு அனுப்புவதே உசிதம்.

சமரஸம் ஆபீஸ், விழுப்புரம்.

ஓம் பரப்பிரமணே நம:

மிகப் புதியது.	# சமரஸம்.	எனினும் பழையது.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு—குறள்.

சாது மகவு	1927௵ ஜனவரி—பிப்ரவரி. அட்சய௵ தை—௴ மாசி—௴	வயது 1 ௴ 8, 9.

கடவுள் வணக்கம்.

அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழங்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாதியின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல் பகலற நின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெலா மோன வுருவெளியதாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

(க-வது) கடவுள் அங்கிருக்கிறார் இங்கிருக்கிறார் என்று சொல்லாதபடி எவ்விடத்திலும் எப்பொருளிலும் ஆனந்தமாயும் சுயவருள் பிரகாசமாயும் சகல அண்ட அடுக்குகளிலும் நிறைந்தவராயும், எச்சமயத்தவரும் என் என் தெய்வமென ஏற்றி போற்றும் பரமசொரூபத்தை வணங்குவோமாக.

சமூக ஞானம்.

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு:—

மனிதர் சொல்லும் சொற்களின் நுண் பொருளை யுணர வல்லவர்கள் மேலோர்களாவர். கீழோர் அதாவது சாஸ்த்திர ஆராய்ச்சியில்லாத பாமரர்கள், பெரியோர் சொல்லை யளவிட்டு பார்ப்பது அறிவின்மையாகும். சிலர் ஜனங்கள் அதிசயிக்கத் தக்க விதமாய் தங்கள் இனிய சொற் சாதுர்யத்தினால் பாமர ஜனங்களை வசியுப்படுத்தி நல்ல விஷயத்தினடுவே தீய விஷயங்களை கொட்டி தாங்களாற்றும் உண்மை பிரசாரத்துக்கு பங்கம் விளைவித்து விடுகிறார்கள். இதற்கு ஒரு சம்பவத்தை சொல்லுவோம்:—

சென்ற மாதம் யகாலில் ஓர் கதா பிரசங்கம் நடந்தது. வள்ளிசுயம்வரம் யென்னும் சரித்திரத்தை ராமடு பாகவதரால் விமரிசையாக உபந்நியாசிக்கப்பட்டது. நானும் ஆங்கு சென்று அக்கூட்டத்தின் னொருவனாகக் காணப்பட்டேன். கதையின் நடுவில் நாரதர் வைகுண்டமணுகி ஸ்ரீமந்நாராயணனை தரிசித்ததாகவும், அவர் வரவு கண்ட மூர்த்திகள் எழுந்து நமஸ்காரம் நாரதருக்கு செய்ததாகவும் சொல்லி பின்பு நாரதர் பிராம்மணராதலால் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி முதல் தேவர்களெல்லாம் நமஸ்கரிக்கின்றார்கள். ஆகையால் நீங்களும் பிராம்மணர்களைக் கண்டால் கும்பிட வேண்டும் யென்று சொன்னதுமல்லாமல் ஊசிப்போயிருந்த பழையகட்டு பெட்டியைத்திறந்து அதிலிருந்து இரண்டொருகயநல வார்த்தையும் சேர்த்துவிட்டார். அதாவது பிராம்மணர்கள் வலது கையில் அக்கினியிருக்கிறது. அவர்கள் தினந்தோறும் அவிர்ப்பாகம் கொடுக்காவிட்டால் சூரியன் சரிவர உதயமாகி வெளிகிளம்பான். ஆகையால் பிராமணர்கள் வலது கையினால் மற்றவர்களுக்கு பிரதி நமஸ்காரம் செய்தால் எரிந்து விடுவார்கள். என்னும் வார்த்தையையும் மிகைப்படுத்தி பேசினார். நாரதருக்கும் இக்காலத்து பிராமணருக்கும் ஆயிரத்தாலும் வித்தியாச மிருக்கின்றது. அவற்றில் பிரம்மசார்ய ஆச்சிரமத்தைச் சேர்ந்தவராகையால் தேவர்களும் வணங்குவது மிகையாகாது. ஆனால் எத்தேய மக்களும் மனித சமூகத்தை சந்திக்கும்போது அன்பின் பெருக்கி

ஞல் வந்தனம், நமஸ்காரம் செய்வது உலக வழக்கே. நமஸ்காரம் செய்ய மனமிசையாதது வெகு சிலரது நன்றியற்றதும் மனச்செருக்குள்ள கொள்கைகளாகும். ஓர் நாயின் நமஸ்காரத்துக்கு பிரதியாய் பரமசிவனுயிருந்தாலும் அதைவிட இருமடங்கு வணக்கத்துடன் நமஸ்காரம் செய்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் பாவம் சம்பவிக்கும். அஃதோர் நன்றிகெட்ட செய்கையுமாகும். நமஸ்காரத்துக்கு பிரதியாய் தனது இரண்டு கரத்தையும் குவித்து பொருளும் பிரயாசையின்றி அக்கடனை தீர்க்காது வேறெவ்வழியில் தீர்ப்பாரோ யறியேம். இதைமாத்திரம் அவ்வளவு அவசியமாக போதித்தவர், ஆவ்வூர் குடிக்கும், கொலைக்கும் இந்த ஜில்லாவில் துறைமுகப் பட்டணமாயிருக்கின்றதே. அவைகளை நிறுத்துவதற்கு தக்கநியாயங்களை போதிக்கப்படாதா? இதுநிற்க,

அக்கூட்டத்தின் மிர்தங்கம் தொரசாமி அய்யரும் பின்பாட்டு ராமாஸாமி அய்யரும் அங்கு குழுமியிருந்தனர். இவர்கள் மூவரும் மிக்க வல்லுணர்களாகும். எனக்கும் சிலசமயங்களில் பேருதவிபுரிந்துள்ளார்கள். இவர்கள் எப்பொழுதும் சமரஸ கொள்கையுள்ளவர்கள். தயாள சிந்தையும் பிராமணதத்துவமு வாய்ந்தர்களெனினும் அரியாமையினுல் சொல்லியிருக்கக்கூடும். பாண்டலம் ராமஸாமி அய்யர் அகாலவேளையில் உலகத்தில் ஒருவரும் செயற்கரியவிதமாய் அமுதளித்துள்ளார். இச்செய்கை பிராம்மண தன்மையுள்ளவரன்றி வேறெவரும் கனவிலும் செய்யார்கள். அதற்கு நன்றி பாராட்டு முகத்து இந்த சந்தர்பத்தை யொட்டியாவது அவர்களை பெருமை படுத்த முயன்றனன். சபையில் பேசும்போது கேட்போர் புத்தி கலங்கும்படி உண்மையும் ஆதாரமற்ற சொற்களை சொல்லி புத்தியை கெடுப்பது பெரும்பாவமாகும். பாமரஜனங்களுக்கு பகுத்தறிவு எப்படியுண்டாகும்?

திருவண்ணமலையில் ஸ்வாமி வேதாஜலம் (இவர் பிராம்மணர்) ஒரு அற்பநாயிக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்த ஓர் நாளை நான் பார்த்திருக்கிறேன். சென்னபட்டணம் கனம் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் அவர்கள் சொல்லுவதாவது இன்னும் ஐந்துவருஷத்தில் இந்துக்களில் பல சமயத்தவரும ஒன்றுபட்டு சமீபத்தில் அ

துவரும் ஒரேபந்தியில் சாப்பிடவும் சமரஸமான முறையில் வாழவும் நெரிடாவிட்டால் நான் உண்மையான இந்தியனல்ல என்று சொல்லியிருக்கின்றார்.

உண்மை.

மக்களில் பெரியார் பலர் உண்மையை வளர்க்க அரும்பாடுபடுகின்றனர் உண்மையின் உயர்வை நன்குணர்ந்தவர்கள் இவ்வுலகத்தில் கோடிக்கணக்காக வசித்துவருகிறார்கள். அவர்களில் மகாத்மா காந்தியவர்கள் தலையாவர். அவர் பொய்யென்னும் மாயக்காட்டைவெட்டி வழிவிலக்கிக்கொண்டே போகின்றார் மனம்வயப்பட்டவர்கள் அவர் பின்னே தொடர்ந்து செல்லுகின்றார்கள். மனதை பக்குவப்படுத்தியலாத பலர் வாயாடிதனத்தினால் பொதுமக்கள் மனதை கலக்கிவிடுகிறார்கள். ஆனாலும் நூறுவருடங்களுக்கு முன்னர் நமது இந்தியாவில் கல்வி வாசனையில்லாத கீழ்மக்களில் பெரும்பாலோர் பொய்யே சொல்லத்துணியார்கள். 20 வருஷத்திற்கு முன்புகூட கிலர் கிராமத்துக்கு ஐந்து ஆறு நபர்களிருந்தார்கள். இங்கிலீஷ் ஆக்ஷி முறையில் அவர்களும் பொய்க்கு அடிமைகளாகிவிட்டார்கள் இப்பொழுது ஏதேனுமொருவன் இருந்தாலும் அவன் வக்கீல்களுடைய மாயவலையில் சிக்காதவனாகும் கற்றுணர்ந்த பெரியார் உண்மை பேசுவதற்கும், அவிவிவேகிகள் பேசும் உண்மைக்கும் வித்தியாசம் அபாரமாயுள்ளது. அதை அடுத்த சஞ்சிகையில் வெளிப்படுத்துவோமாக

தர்மம்.

எல்லார்க்கும் பரமசிவன் துணையாமாகில்—எவ்வுயிர்க்கும்
அவனருள் சேர்ந்திருக்குமன்றோ
பொல்லார்க்கும் அறிவுகெட புரிந்திடாமல்—பொறிவழியே
மனம்பொருந்தி சுழன்றிடாமல்
நல்லோர்க்கும் பெரியோர்க்கும் எளியோர்க்கும்—நாடோறும்
இரக்கமுண்டாய் நடப்பாயாகில்
பல்லோர்க்கும் உயிர்க்குயிராய் நிறையுமெங்கோன்—பரிவினொடு
கருணையருள் பாலிப்பானே.

71-ம் பக்கம் தொடர்ச்சி.

முற்காலத்தில் பிராம்மணர்கள் துறவறத்தையே பெரிதும் பாராட்டிவந்தனர். வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம் சத்தியம் உறுதி, பொறுமை, ஆசையின்மை என எட்டுதர்மங்களையும் கைக்கொண்டு, தனது குக்ஷிக்காக யாசித்து தானும் தனது இல்லாளும் புசித்து மிகுதியை அதிதிகளுக்கு யிட்டு கீழ்மக்களை ஞானத்திலும், கல்வியிலும், கர்மத்திலும் பழக்குவதற்கு தர்மத்தை உபதேசித்து வந்தார்கள்.

பொது ஜனங்களுடைய செல்வமும் சுகமும் தன்னதெனபாவித்து வந்தார்கள். நாளைக்குவேண்டுமென்று ஏதேனும் ஓர்பிடிஅரிசியாவது, பாலாவது கனிவர்க்கத்தையாவது மீதிவைத்தவனல்ல. சதாகாலமும் ஈஸ்வரத்தியானமா யிருப்பார்கள். கனவிலும்பொய் சொல்லார்கள். சாமோபாயத்தை கனவிலும் அனுசரிக்காமல் உண்மைவழியே இன்பத்திலும் துன்பத்திலும் உறுதிபேச்சினும் நடக்கையிலும் செலுத்துவார்கள. தீராத இடுக்கணிலும் பொறுமையை நிகழவிடார்கள். நினைத்தபொழுது கடவுள் கொடுப்பாரெனும் மனத்தெளிவுள்ளவனாதலால் ஆசைவாய்ப்பூதத்திற்கு யடிமைபடாதவர்கள் இவைபோன்ற நற்குணம் வாய்ந்தவர்கள் தான் அக்காலத்து நிலவியிருந்தார்கள். இத்தகைய நற்குணமமைந்த பிராம்மணன் பசித்திருக்க எந்த வருணாச்சிரம தர்மியாவது புசித்தால் அவன் சண்டாள தத்துவத்தை யடைவான். மேற்கூறிய அருமை குணங்கள் வாய்ந்தவன் எச்சாதியினனாயினும் அவனே பிராம்மணன் என்று வேதம் கோஷிக்கின்றது.

பிராம்மணர்களுடைய தொழில்கள் ஆதிகாலத்தில் நாசமாக்கப்பட்டன. இது அன்னிய ஆக்ஷிமுறையின் வேகத்தினால் உண்டான நாசத்துவமாகும். நான் இந்த ஜில்லாவை 2 மாதத்திற்கொருமுறையாக பலதடவைகளில் சுற்றி ஒவ்வொருக் கிராமமும் போயிருக்கிறேன். என்னை ஜனங்கள் இன்னாரென்று அறிந்துகொள்ள முடியாத அவ்வளவு கேவலநிலமையில் பிரசாரம் செய்துவருகிறேன் கேவலம் பத்திரிகை பிரசுரிப்பது மல்லாமல் பிரதிதினமும் 15 மைல் கால்நடையாய் நடந்து ஒவ்வொரு மதத்தினருக்கும் ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஏற்படும் மனச்சந்தேகங்களை நேரில் உப

தேசித்து தீர்க்கிறேன், நூறு கிறிஸ்தவ உபதேசிகள் செய்துமுடிக்கக்கூடாத பலநன்மைகளை பிரதிமாதமும் செய்துக்கொண்டேயிருக்கிறேன். நான் செய்யும் பிரசாரம் அமைதலும் அந்தரங்கமுமானது. பலஜனங்கள் எனக்கு அன்னமளித்துதவியதில் குறிப்பிட்டசில பிராம்மணர்களே போற்றக்கூடியவர்களாயிருக்கின்றனர். வடக்கந்தூர் உபாத்தியாயர் ராமஸாமி அய்யர், நல்லாத்தூர் அனந்தராமய்யர் ரிஷிலண்டியம் அனந்தசுப்ராயர் முதலிய பலர் முக்கியமானவர்கள். ஆனால் இவர்கள் சமயஞானத்தில் பேர்போனவர்களேயொழிய சமூகஞானத்தில் வல்லுனர்களென சொல்வதற்கில்லை. இவர்கள்போன்ற பல உத்தம பிராம்மணர்களின் அருஞ்செயலை சமய தர்மத்தில் விளக்கி காட்டுமாறு விடுத்து காரியத்தில் பிரவேசிப்போம். இப்பொழுது பிராம்மணர்களில் வெகு சிலரே பிராம்மண தர்மத்தை நிறைவேற்றுகின்றாராபினும் மற்ற தர்மாச்சிரமிகளிடத்தில் இக்காலத்தில் அதிகமாய் மலிந்து காணப்படுகின்றன. பழைய காலவழக்க வொழுக்கமுள்ள பிராம்மணர்கள் தவிர நவீன நாகரீகத்தில் ஈடுபட்டவர்களெல்லாம் பொய், சூது, களவு, ஏமாற்றல் பேராசை போன்ற பலமேல்நாட்டு உபதேசங்களையே ஆதாரமாகக் கொண்டு அவைகளில் வெற்றி பெற்று ஜெயசங்கமூதுகின்றனர். இப்பொழுது பிராம்மணதர்யம் 1000-த்தில் 1 பங்குதான் காணப்படுகின்றது. உத்தம பிராமணர்களையறிந்து அவர்களுக்கு உதவிபுரியும் விமர்சனமும் தற்கால ராஜாங்க முறையில் கிடையாது.

க்ஷத்திரிய தாமம்:—முற்காலத்தில் தெய்வாம்ஸமுள்ள மனிதன் ராஜரீகத்தை வகித்துவந்தான். அப்பொழுது துரைத்தனங்கள் சுயேச்சாதிகாரங்கள் பெற்றவைகளாயிருந்தன. பெருமைக்கும் கீர்த்திக்கும் ஆசைப்பட்ட தெய்வாம்சமுள்ள மனிதன் தலைமை வகித்து சர்வாதிகாரத்துக்கும் உற்பத்தி ஸ்தானமாய் விளங்கினான். அவன் தன்பிரஜைகளின் நன்மைக்காகவே ஜீவிப்பவனாகவும் சதாகாலமும் அவர்களின் க்ஷேமத்திலேயே கருத்தை செலுத்துகிறவனாயுமிருந்தான்.

தன் கால முழுவதையும் செலவழிப்பதில் மிரஜைகளுக்கு ஹிதம் புரிவதென்ற ஏக்கமே அவனது கர்மமாகக் கொண்டிருந்தான். பொது ஜன நன்மை யென்னும் ஒரே உத்தேசத்தின்

பொருட்டே ராஜாங்கம் ஏற்பட்டிருந்தது. அறியாதவர்களுக்கும் அணையற்றவர்களுக்கும் அறிவு புகட்டி அவர்களை உயர்த்தி பயிற்றுவிப்பதற்கு பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் எலும்பும் சதையைப்போல் ஒற்றுமையாய் சகல பிரயத்தினங்களும் செய்துவந்தார்கள். ராஜாங்கத்தில் பரோபகார சீலர்களே சாமான்ய பிரபுக்களாயுமிருப்பதால் அன்பால் அமைக்கப்பட்டனவும், அருளப்பட்டவையுமான சட்டங்களின்படி நீதி செலுத்தக்கூடியவர்களாயிருப்பதற்கு அரசன் தன் அதிகாரத்தை பிரித்து கொடுத்து அவர்களால் ராஜாங்கம் நடத்திவந்தான். ஞானம் தலைமைபூண்டு ஆக்ஷி புரிந்து அதிகாரம் செலுத்திவரும் பக்ஷத்தில் பலமும் சௌந்தரியமும் வாய்ந்த என்னென்ன கரியங்களை மானிடவர்க்கத்தார் செய்துமுடிக்க இயலுமென்பதற்கு இந்தியர்களின் பழைய நாகரீகங்களே உற்ற சாக்ஷியாய் விளங்குகின்றன. அதன் பின்னர் தெய்வீகத்தன்மையற்று கேவலம் மனித இச்சையே தனது பெருமையாகக்கொண்ட அரசர்கள் முன்னிருந்த அரசர்களின் அதிகாரத்துக்குமட்டில் பாத்தியஸ்தர்களாகி வந்தார்களேயன்றி அவர்களுடைய ஞானமும், அன்பும், உறுதியும் இவர்களிடத்தில் சிறிதும் இல்லாமற் போய்விடவே மானுஷ க்ஷேமத்தின் பொருட்டு ஏற்பட்டு பரோபகார புத்தியுடன் நடந்துவந்த துரைத்தனமுறையானது, கொடுங்கோன்மைக்கும் நாசத்துக்குமாக ஏற்பட்டு ஆள்வோரின் சௌக்கியத்திற்காகவே நடந்தேறப்பட்டது. உத்தம அரசர்களால் ஆளப்பட்டமுன்னோர்கள் கொள்ளைக்காரர்ளாகவும் இம்சிப்போர்களாலும், ஆளப்பட்டு வந்தார்கள். அதனால் பண்டைதர்மங்களெள்ளாம் சுய நலமும் கெடுக்குங்குணமுள்ள கொள்ளை நோய்வாய்ப்பட்டுபோயின க்ஷத்திரிய தர்மத்தை நிறைவேற்றும் புநிதன் க்ஷத்திரிய தர்மத்தின் உள்ளுணையை அறியாதவனாய் தன்னையும் தன்பெண்ஜாதி பிள்ளைகளையும் திருப்தி செய்யவும், அலங்கரிக்கவும், மற்ற ஜனங்கள் சகலத்திலும் தங்களுக்கு அடிமையாய் உழைக்க வேண்டுமென்று பகீரத பிரயத்தனம் செய்தார்கள். ஒருவன் க்ஷத்திரிய தர்மத்தில் பிறழுவானாகில் மற்ற மூன்று தர்மங்களும் அதோகதியாகிவிடுமல்லவா? க்ஷத்திரிய தர்மத்தை கைக்கொள்ளுபவன் கீர்த்தி அதிகாரம் என்ற இரண்டு

விஷயங்கள் தவிர ஜீவனோபாயத்துக்கு வேண்டிய பொருள்களை பிராம்மண தர்மிஷ்டிபோலவே பெற்று தன் கையில் மிச்சமில்லாமல் அப்போதைக்கப்போது பொது நன்மைகளில் செலவிட வேண்டும். இப்படிப்பட்ட உத்தம க்ஷத்திரியாளுக்காகவே அவரது பிற்காலத்துக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது நியாயத்தில் அனுவளவும் பக்ஷபாதமின்றி நடுநிலைமை வகித்து தீர்ப்புசெய்து வந்தான். பசுங்கன்றின் வதைக்காக தன் மகனை தேர்காலில் செலுத்தி கொன்றவனும், தன் மகன் ஒருவன் கண்களை கெடுத்தபோது தனக்கு பின் அரசுபுரிய ஒரே மகன் யிருப்பது கண்டு அவன்பேரில் கருணை கூர்ந்து தன் கண்ணில் ஒன்றும் தன் மகன் கண்ணில் ஒன்றுமாக பிடுங்கி வழக்காளிக்கு நீதி செலுத்தினவனும், உன்மகனை கொன்றதற்கு நானே என்ராஜ்யபாரத்தை விட்டு உன்மகனை விட பதின் மடங்காய் உனக்கு பணிவிடை புரிவேன் குற்றத்தை க்ஷமிக்க என்று கெஞ்சி கண்ணீர் விட்டவனும், ராஜ்யமும் மக்கள் மனைவியை இழந்தாலும் எவ்வளவு இழிதொழிலை புரிந்தாலும், ஒருவேளை மோக்ஷகதியே இல்லையென்று சாதித்துவிட்டாலும் அப்பொழுதும் க்ஷத்திரிய தர்மத்தில் பிறழேன் என்றவனும், தோன்றி மறைந்தது அக்காலத்திலன்றோ?

இக்காலத்து க்ஷத்திரிய தர்மத்தின் பரிணமசக்தியை என்னென்றுரைப்பது. இப்பொழுது உலகத்தில் எங்குபார்த்தாலும் அதிகார வர்க்கமே புழுத்து போய்விட்டது வைசிய, சூத்தரர்களின் செல்வமெல்லாம் அதிகார வர்க்கத்தவரின் கைப்பொருளாகிவிட்டன. உத்தியோகத்திலிருந்துக்கொண்டே வியாபாரம் விவசாயம் செய்துவருகின்றனர். இப்பொழுது எங்கேனும் வியாபாரக் கூட்டம் வலுத்திருக்கக்கண்டாலும் விவசாயி கம்பீரமாய் காணப்பட்டாலும் அவர்கள் வாழ்வெல்லாம் ஆதிகாரிகளின் செல்வமே, கடன்பெற்று அடிமைகளாய் வாழ்கின்றனர். க்ஷத்திரியர் வியாபாரம் விவசாயம் முதலியவைகளில் மனதைச்செலுத்துவதினால் க்ஷத்திரிய தர்மத்தை நழுவவிடுகிறான். பழக்க தோஷத்தினால் வியாபாரக்குணமும், கீழ்ஜாதி புத்திகளும் மலிந்து கிடக்கின்றன. காரணம் அரசாக்ஷி முறையே வியாபார முறையாய் நடைபெறுகின்றன. இந்த க்ஷத்திரிய தர்மம் இவ்வாறு விநியோகப்படுத்தப்பட்டிலி

ருந்து எங்கும் ஓர் விழிப்பு தோன்றின. அத்தந்திரமுறைகளை யறியாத பாமரர் அவைகளை உணரவும் பெரியாருக்கிருந்த உரிமைகளை எதிர்க்கவும் தலைப்பட்டு சுயேச்சாதிகார முறைப்படியிருந்த ராஜாங்கமானது குடியாக்ஷி முறைக்கு இடம் கோலிக்கொண்டது. இப்படியே இந்த உலகத்தில் பிரான்ஸ், அமெரிகா, ஜர்மனி முதலிய பல நாடுகளில் இம்முறைகளே யனுசரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவும் நாமும் ஓர் நாள் அவ்வேடத்தை தரிக்கவேண்டுமென்று தீர்மானித்துவிட்டது சின்னுட்களாக தன் பழைய உருவில் மாறிக் கொண்டே வருகிறது. இன்னும் வெகுசமீப காலத்திலேயே இந்தியமாது சிரோன்மணியும் ஓர்நாள் முடிபுனைந்து நடனம் கொள்வாளென்பதற்கு பல சான்றுகளிருக்கின்றன. ஆனாலும் இந்தியரில் மிகச் சிலர்தவிர பலபேர்க்கு குடியாக்ஷி முறைமையின் தத்துவமே நன்கு புலனாகவில்லை யென்பது பல் முகத்துணிபு. சாஸ்த்திர ஆராய்ச்சியிலும் தினசரி வர்த்தமானத்திலும், சட்டபரிச்சியத்திலும் பழைய அல்லது புதிய நாகரீகத்திலாயினும் பழக்கம்பெறாத பல்லோர் இப்பொழுது அரசபீடத்தில் அமருவதற்கு ஆசைப்பட்டு விட்டதால், அவர்கள் தங்கள் கவர்வத்துக்கு தக்கபடி கல்வியில் ஈடுபட்டு உள்ளும் புறமும் உறம்பெறுவாறெனவே நம்புகிறோம். வைசிய தர்மம் பிராமணர் க்ஷத்திரிய தர்மத்தை அபேக்ஷிக்க க்ஷத்திரியர் வைசியர் தொழிலும் ஆசைப்பட்டு இப்பொழுது உலகமே வியாபாரக் கூட்டமாயிருக்கின்றன. வியாபார வாசனையை நுகராதவன் லக்ஷத்தில் ஒருவனாவது உண்டோயென்பது சந்தேகம் வைசிய தர்மம் அதன் கொள்கைக்கு சரியான முறையில் நடைபெறாமல் மக்களை ஏமாற்றுவதில் சிந்தை செலுத்துகின்றது. காரணம் அளவுக்கு மீறி வியாபாரிகள் மலிந்து விட்டதால் வியாபாரத்தில் லாபம் குறைந்து உத்தம வியாபார முறையானது பித்தலாட்ட முறையாகிவிட்டது. பழைய கால வியாபாரிகளின் யோக்கியதை நிகாற்றது. அவர்கள் நாணயத்திலும், உபகாரத்திலும், மிகுந்த பொய்யுரையாமல் வியாபாரம் செய்து தங்களது ஜீவனத்தை நடத்தி வந்தார்கள். இப்பொழுது அம்முறைகள் போய்விட்டன. இப்பொழுது நடக்கும் வியாபாரங்களெல்லாம் பெரும்பாலும் நஷ்டமே வந்து முடிகின்றன. யாராவது பொருளாளியாயிருப்பின் அவர்கள் வியாபாரத்தின் ஊதி

யத்தின் நாணயத்தின்பேரில் ஜனங்களிடத்தில் பெற்ற பொருளை மோசம் செய்தவனுகவே யிருத்தல்வேண்டும். காரணம்? வியாபாரிகள் அளவுக்கு மிஞ்சி பெருகிவிட்டதாலும்சூத்திர தர்மிகளெல்லாம் சோம்பேறிகளாய் தேகத்தை வளர்க்க ஒவ்வொரு குடியானவனும் வியாபாரம் செய்ய தலைப்பட்டதன் பயன் என்னே! தவிர அரசாங்க பாதுகாப்பும் உதவியுமில்லை. இதைப்பற்றி வியாபாரச் சட்டம் என்னும் வியாசத்திற் காண்க: ஆகையால் வியாபாரம் ஒழுங்குபடுவதற்கும், உண்மை முறைகளை யனுசரிப்பதற்கும் குடியானவர்களும் அதிகாரிகளும் வியாபார துறையிலிறங்கி விடாமல் இருந்தால்தான் முடியும்.

சூத்திர தர்மம்:—ஜனங்கள் மிருகபக்ஷணி யாகாமல் சாகபக்ஷணியாய் பெருகுமாறு தானியங்களை பயிர் செய்து அதன் மூலியமாய் மக்களை ஊட்டுவதாகும். பயிரிடுவதென்ருல் வைராக்கியமும் ஊக்கமும் வேண்டும். ஊக்கத்துக்கு தகுந்தபடி பொருள் ஏராளமாய் வேண்டியிருக்கின்றது "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்று கூறியுள்ளபடியால் பிராம்மண, க்ஷத்திரிய தொழில்களை ஒரு காசு மன்னியில் நிறைவேற்ற முடியும். ஆனல் வியாபாரத்தையும் விவசாயத்தையும் முலதனமில்லாமல் எவ்வாறு நிறைவேற்ற முடியும்? இப்பொழுது விவசாய பலன்கள் மழையின்மையாலும் ஜனங்களிடத்தில் ஊக்கமின்மையாலு மன்று. அதிகாரவர்க்கம், குடியானவர்களின் திரவியத்தை கடுமையான வரியாலும், அபார சிக்ஷையாலும், வஞ்சகத்தாலும், அதிகாரிகளின் வியாபாரப் பெருக்காலும் தடாகம் பொல் ததும்பியிருந்த குடியானவர்கள் செல்லமெல்லாம் சிதரடித்தனர். ஓர் குடியானவன் கிரமப்படி 8 மணிக்கு உழைக்க வேண்டியவன் காலை 4 மணி முதல் இரவு 10 மணி வரைக்கும் 18 மணி மணி நேரம் பாடுபட்டு க்ஷீணித்து போய் விடுகிறுன். எப்படி பாடுபட்டும் கிராமத்தில் இரண்டொருவர் தவிர மற்றவர்களுக்கு ஒரு மாத போஜனங்கூட கிடைப்பதில்லை, பாதிக்கு மேற்பட்டவர்கள் களத்திலேயே கடன்கார்ரர்களுக்கும் அரசிறைக்கும் அளந்துவிட்டு வயிறெரிந்து வீட்டில்வந்து படுக்கின்றுன். எஞ்சிய ஓர் சாரார் பிச்சாடன மூர்த்தி வடிவங்கொண்டு ஊர் ஊராய் கிளம்பி விட்டார்கள். ஆகையால் சூத்திர

தர்மம் எங்ஙனம் செவ்வையாய் நடைபெரும். குடியானவர்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் எவ்வாறு முற்படுவது. அந்தோ ஏழை குடியானவர்கள் கஷ்டம் பாவம்! பாவம்! பாவம் பெரிதும் பாவகரமான விஷயமே. இனி சமய தர்மத்தை விவரிக்க அடுத்த பத்திரிகையில் சமயஞானம் என்றும் தலைப்பின்கீழ் ஒழுங்குபெற விவரிப்போம்.

ஜீவகாருண்யமில்லாதவன் யார்?

அணில்களின் துயரம்.

அவ்வண்ணமே அவ்வனச்சிங்கத்தினிடம் சென்று தங்களது குறைப்பாடுகளைச் சொல்லிக்கொண்டன. சிங்கம் வெருண்டுகோபாவேசமாய் அவ்வித துஷ்கிருத்தியங்களை செய்யும் மானிடர்என்போர் எங்ஙனமிருக்கின்றனர் காட்டுமின் என்றது. அஜ்ஜீவராசிகளெல்லாம் மிருகபதியை கூட்டிக்கொண்டே பாலை நிலங்கடந்து குறிஞ்சிநில வழியாக வருகையில் அங்கு காடை, கௌதாரி முயல் முதலிய பிராணிகள் ஒன்றுகூடி ஏதோ சிலவிஷயங்களை யோசித்து விசனித்துக் கொண்டிருந்தன. சிங்கம் அவைகளைப் பார்த்து "உங்களுக்குற்றதென்னவென" வினவ அதற்கு அவைகள் அடிபணிந்து எவ்களாண்டவனே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எங்கள் குழாங்களை மனிதர்கள் கன்னிவைத்து பிடித்து நெருப்பில் எரிந்து நீராகும் தங்கள் சதைகளை போஷிக்கின்றனரே! உலகத்துக்கும் மனிதர்களுக்கும் காக்ஷி குருத்தும் எங்களினம் வேறற்று போய்விட்டனவே? என்செய்வதென உறையாடுகின்றோம் என்று கூறிற்று. ஆ! ஆ!! என்ன மனிததுாஷிகள் ஜீவர்களுக்குப் பெருங்கொடுமையை நிகழ்த்துகின்றார்கள். அவர்கள் எப்படிபட்டவர்களோ நான் ஒருநாளும் அறியேன் என கூறிக்கொண்டே நெய்தநிலத்தையடைந்தன. வெகுதூரத்துக்கப்பால் சிங்கம் வருவதாக யூகித்தறிந்த வலைஞன் பயந்து பிடித்த மீன்களையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு ஓர் பொந்தில் பதுங்கிக்கொண்டான் அப்பிராணிகள் குளத்துக்கருகில் வந்து தாகவிடாய் தீர்த்துக்கொண்டிருக்கையில் பல சொற்களணியாய் ஒ வென்றலரும் கூக்குரல்

கேட்டது. அவைகள் திடுக்கிட்டு கரையேறி பார்த்த பொழுது
பிடிபட்ட மீன்களெல்லாம் குதித்து குதித்து உயிர்துடித்து தண்
ணீர் தண்ணீரென வாயை திறந்து கொண்டே, ஐயோ ஜலத்தில்
வசித்த எங்களை இப்படியும் உயிர்வதைக்கலாமா? நாங்கள் என்
செய்தோம்? என்செய்தோம்? அடாமனிதபாபிகளா உங்கள் குல
மும் எங்கள் நிலைமையாகாதா! யென கூக்குறலிட்டன. ஹரி! ஹரி!
யென்று தலையில் கையைவைத்து கனவிலும் நினைவிலும் இப்பாதக
சொற்கள்தானு செவியிலடிவடவேண்டும். நான்காட்டிலிருந்தேனே
யொழிய இச்சூது மார்க்கங்களெள்ளாம் சிறிதும் அறிநதிலேனே
உலகை யணுக யணுக துன்பங்கள் அதிகமாக செவியிலடிபடுகின்
வென்தனக்குள் சிந்தித்துக்கொண்டே ஆடுமாடுகள் மேய்த்துக்
றன. கொண்டிருந்த முல்லை நிலத்தின் வழியாக வருகையில் அங்கு
ள்ளமிருகங்களில் பசுக்கூட்டங்கள் கதறிக்கொண்டு மிருகபதியிடம்
வந்து நமஸ்கரித்து தேவரீர் காட்டை விட்டு நாட்டையடைந்த
காரணம் ஏதுளது தயைசெய்து சொல்வீர்களென முழங்காலிட்டு
கேட்டன அதற்கு மறுமொழியாய் நடந்த சவிஸ்தாரத்தை ஒழுங்
காய் சொல்லி முடிவில் மனிதப்பாவிகளை அழிப்பதற்கே செல்லு
கிறேனென முடித்தது. அதுகேட்ட பசுக்கூட்டங்கள் ஆம்? ஆம்
யென தலையசைத்து, அவர்களுக்கு அதுவே சிக்ஷையாகும் நன்றி
கெட்ட சண்டாளர்கள் அவர்களுக்கு தங்கள் கஷ்டம் தவிர பிறரு
டைய கஷ்டங்களை கனவிலும் சிந்தியார்கள். பேராசையுள்ளவர்
கல் நாங்கள் அவர்களுக்கு பால்கொடுக்கும்போது பலவித தீனி
களை வைப்பார்கள். பால் மறுத்தவுடனே, போதுமான தீனி
போடாமல் வண்டியிலும், செக்கிலும், ஆலையிலும் கட்டி எங்களை
வதைப்பதோடு நாங்கள் சாகுமுன்னமே எங்களை கொன்றுத்
தின்னும்படி சண்டாளர்கையில் ஒப்புவித்து விடுகின்றனர். என்று
துலையும் இக்கொடுமையின் பாவம்! எப்போதான் மறப்பரோ
எங்கள் கொளைகளின் மோகம்! என்று வருந்தி அங்களாய்த்தன.
சிங்கம் அவைகளுக்கு ஒருவாறு தேறுதல் சொல்லி, மானிடரின்
உறைவிட மெங்கே என்றது அப்பசுக்கள் சமீபத்திலிருந்த ஓர்
கைம்மியச்சாலையை காண்பித்து அதனுள்ளே யிறுக்கின்றனர்.
அன்று புகன்றன. சிங்கம் அவ்வாறே மருதநிலமடைந்து அக்

கைம்மியர் சாலையினுள் தனது பரிவாரங்களுடனே புகுந்தது. அங்கு சிற்பசாஸ்த்திரியான கைம்மாளன் திடுக்கிட்டு மெய்சிலிர்த்து கைகால் உதர ஒன்றும் தோற்றாதவனாய் எழுந்து வியப்புடன் நோக்கினான். மிருகேந்திரன் 'மனிதனென்பான் நீதானா' வென்று கேட்டது.

மகாத்மா காந்தி சரிதை

கடலென விளங்கும் வேதகாரண குருவைக் கண்டுன்
உடல் பொருள் ஆவி மூன்று முகந்தவர்க்குதவி நீதான்
திடமுடன் பூர்த்தியாகி செய்து சிற்பரத்தில் சேர்ந்து
நடமிடும் காந்தி நாதரை நாடு நெஞ்சே.

நறுமலர் நீரிளநீர் பழந்தேன் பாலோடு
நல்லறு சுந்த வர்க்கமுதற் றூபதீபம் கோரா
நற்குண நற்செய்கைதயை நட்பு மெய்மானம்
நலமுற நன்னெறி நிற்கும் காதன் நிலைநின்று
புண்ய பாவங்கள் தெரிந்தோதல் நூல்கள்
சிறிது படித்துயிர்கள் வதையாமல் நித்தஞ்
செய்தொழிலும் கிரியைவழுவாமல் நின்றோர்
உறுதி பெருபல வறிவுமீத லோடு
உயர்த்தகுடி யாகிமிக வாழ்வார்தாமே.

உலகத்தில் எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் பாவிக்கும் புனிதனாரோ? எல்லா உயிருக்கும் நேரிடும் இன்பதுன்பங்களில் தானும் உழன்று உழைக்கும் புண்ணியன் யாரோ? அநித்தியமாகிய இந்த உலகவாழ்க்கையின் மூலமாய் நித்திய வாழ்வுக்கு வழிகாட்டி செல்லும் நமது மேய்ப்பன் எவரோ? பொது வாய் உயிர்களின் செழுமைக்காக தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தும், உலகத்தில். வலிய உயிர்கள் எளிய உயிர்களை வதைக்காவண்ணம் எளிய உயிர்கள் அநுஷ்டிக்க வேண்டிய முறைகளை போதிக்கவந்த குருமூர்த்தியும், நமது குருமாணிக்கங்களாகிய ஏசுநாதர், இராமகிருஷ்ணர், விவேகாநந்தா, புத்தர் இராமாநுஜ சங்கரர் முதலிய பெரியோர்களுக்கு நடுநாயகமாக உலகமே கொண்டாடும் ஓர் மகாத்மாவின் சரித்திரத்தை யாம் சுருங்க விவரிக்கப் புகுகின்றோம்.

பரித்திராணய சாதூனும் விநாசாய ச
துஷ்கிருதாம் தர்ம சமஸ்தாபனார்த்தாய
சம்பவாமி யுகே

தர்மம் குன்றி அதர்மம் மேலிடுங் கால்பின்னதை நசுக்க பகவான் அந்தந்தகாலத்துக்கு ஏற்றவாறு அவதரித்து தர்மத்தை நிலைநாட்டு கின்றார் என்பது பகவான் அருள் மொழியாகும். உலகத்திலே அதர்மம் மேலிட்டு அளவுக்குமேல் முக்காலேமூன்று வீசம் பஞ்சமாபாதங்களை தங்களது வாழ்க்கை நலனைக்கொண்டும், ஆசையைப்பெருக்கிக்கொண்டும் போகும் மனித சமூகங்களினால் உண்டாகும் அனர்த்தங்கள் கொழுந்து விட்டெரியும் இக்காலத்துக்காக, பகவான் அவதாரம் செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. இப்பொழுது உலகமே வைசிய தர்மத்தைக் கைக்கொண்டு மற்ற பிராம்மண, க்ஷத்திரிய, சூத்திர தர்மங்களை நழுவ விட்டுவிட்டது. உலக வழக்கமானது தங்களுக்கு சம்பந்தமான பாஷை, தொழில், மதம் உள்ளவர்களிடத்தில்தான் அதிக பிரீதி பாராட்டி அவர்களின் வார்த்தைக்கு செவி சாய்ப்பார்கள். இதனால் பகவான் முந்திய யுகங்களில் கீழ்மையான நிலைமையிலுள்ள இடையர், தச்சர், வேடர் முதலிய சூத்திர ஜாதியில் அவதரிக்காமல் வைசிய ஜாதியில் அவதாரம் செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. தவிர இக்காலத்தில் ஆங்கில பாஷையில் பயின்று உத்தியோகப்பதவியில் வீற்றிருந்து எப்பமிடுபவர்கள் சன்யாசிகளுடைய வார்த்தைக்கு செவி கொடுக்கமாட்டார்கள். பணக்காரர்கள்தவிர ஏழைகளுடைய பேச்சுக்கே மதிப்பே கிடையாது. இதனால் பகவான் உயர்ந்த ஜாதியிலும், பணத்திலும் மதிப்பிலும் அவதரிக்கவேண்டியது காரணமாயிருந்தது.

இப்படிப்பட்ட சங்கடமான இக்காலத்துக்கு ஏற்றவாறு எல்லா மதஸ்தர்களும், எல்லா ஜாதிகளும், எல்லா நோக்கங்களும் முதலாளி தொழிலாளி கூட்டங்களும், அதிகார குடிமக்கள் வர்க்கமும் அசட்டுத்தனமாய் பகவான் அருள் வாக்கை கேட்காமல் பயத்தோடும், மனத்தாங்கலோடும், கேட்டு மதிக்கும்படியான கல்வியிலும், பொருளிலும், உயர்ந்த பதவியிலும், சட்டத்திலும், ஞானத்திலும், ஆண்மையிலும் சிறந்து விளங்கும் ஓர் மகா புருஷவ

தாரம் நமது குருநாதனுய் விளங்கும் மகாத்மாகாந்தி யடிகளாவர். அவர் கூர்ஜ்ர நாட்டிலுள்ள பம்பாயிக்குச் சமீபத்திலுள்ள போரிபந்தரில் 2—10—1869 வருஷத்தில் ஜனித்தார். இவருடைய முழுபெயர் "மோகன்லால் கரம்செண்ட் காந்தி" தகப்பன்பெயர் கரம்செண்ட், குடும்ப பெயர் காந்தி. ஆக மூன்றும் சேர்ந்து மோகனலால் கரம்செண்ட் காந்தி யென்பது இவரது சுந்தர பெயராகும். இவருடைய சரித்திரமும் உபதேசங்களும் பிறகு வரும்.

நவநீதம்.

(1) மகம்மதுவின் உபதேசத்தின் சுருக்கமாவது, கடவுள் ஒருவரே உண்டு. அவருக்கெதிரில் கடவுள் விக்கிரகத்துள்ளுமிருக்கிறுரென்று நினைத்து அவைகளை வணங்கலாகாது. (2) வணக்கம் கடவுள் ஒருவருக்கே யன்றி வேறொரு ஜீவர்களுக்கும் அது உரித்ததன்று. மனிதர்கள் ஆத்மசக்திவாய்ந்த பெரியோராகின் அவர்களின் அருமையாகிய செய்கைகளைப்பற்றி அவர்களை பெருமைப்படுத்தி பெருமையாகப்பேசி புகழவேண்டுமேயொழிய அவர்களை வணங்கலாகாது. (3) அக்கிரமஞ் செய்கிறவனையும் துஷ்டர்களையும் அழித்தும் அவர்கள் சொத்துக்களை பராதீனம் செய்தும் கடவுளுடைய உத்தம பத்தர்களை மேலோர்களையும் காப்பாற்றுதலில் ஈடுபடுத்தவேண்டும்.

(2) கிறிஸ்து சாந்தமூர்த்தியின் உபதேசமாவது, எல்லாரும் பாவிகள்; குற்றமில்லாதவன் உலகிலில்லை. ஆகையால் கீழ்மக்களையும் பாபிகளையும் நேசியுங்கள். அவர்கள் குற்றங்களை ஒருதரமல்ல நூற்றுலும் மன்னியுங்கள். பொருமையோடு வாழுங்கள். உன்னிடத்தில் யார் எதைக்கேட்டாலும் கொடுங்கள் உன்னைப்போல் மற்றவர்களையும் நேசி. கடவுள் ஒருவரே. அவரை மனிதன் ஒருநாளும் காணமாட்டான். மனிதன் கடவுளின் சாயலாக இருக்கிறுன். ஆகையால் கடவுளை நேசிப்பதுண்மையானுல் மனிதர்களிடத்திலும் நேசமாயிருங்கள். (4) நாளைக்கு வேண்டுமென்று ஒன்றையுஞ் சேர்த்துவையாதிருங்கள். ஆகாயத்து பக்ஷிகளை கவனியுங்கள். அவைகள் நூற்பதும் உடுப்பதுமில்லை. அவைகளைக் காக்கும் பரமபிதா உங்களை காவாமலிருப்பரா? ஆசையை

அழுங்கள். நீங்கள் எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள், ஆகையால் தகப்பனிடத்தில் அன்பாய் நடந்துகொள்வதைப்போல் நடந்துகொள்ளுங்கள். பயம் வேண்டாம். ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு. உன்னை எவ்வளவு துன்பப்படுத்தினாலும் அவனுக்கு பதிலுக்கு பதில் செய்யாதே. உனக்கு கெடுதி செய்கிறவனை சபியாதே ஆசீர்வதி.

(3) இந்து மதகொள்கைகளாவது. ஒரே கடவுள் உண்டு. கடவுள் உலகத்து சராசரங்களிலெல்லாம் நிறைந்திருப்பதால் ஒரு பொருளையும் அலட்சியஞ் செய்யாதே. ஜீவர்களெல்லாம் கர்மபலத்தால் தேகம் தாங்கி பிறக்கின்றார்கள். கீழான பிறப்புள்ள ஜீவர்களிடத்தில் அனுதாபமும் அன்பும் காட்டுவதன்றி அவர்களை நல்வழிப்படுத்து. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பொருளிடத்தில் பக்தியில்லாதவன் கடவுளிடத்தில் பக்தியுள்ளவனாகான். ஜீவர்கள் படிப்படியாக அனுபோகத்தின்மேல் மேலான பதவியடைகின்றன. இப்படி மேலான பதவியடைவதற்கு அனேக பிறவிகள் அவசியமாயிருக்கின்றது. உலகில் சாந்த மூர்த்தியாய் ஒரு கூட்டத்தார் வசிக்கவேண்டும். மற்றொருவர் பதிலுக்குபதில் செய்ய ஆற்றலுள்ளவர்களாயும், மூன்றாவதார் உலக காரியங்களை மற்ற கூட்டத்தார் கவனித்துவரல் வேண்டும். உலகத்திலுள்ள ஒரு மதத்தையாவது ஒரு ஜாதியாவது, ஒருவித கொள்கையினையாவது இழிவுபடுத்தவும் அவமதிக்கவும் கூடாது. எல்லாம் அவனருளே! அவனருளில்லாத வஸ்துக்கள் தானே அழிந்து பட்டு போகும். பரமாத்மாவின் அம்ஸம் மனிதர் குழாங்களிடத்தில் விசேஷமாயிருப்பதால் மற்றெல்லா வஸ்துக்களைவிட மனித சமூகத்தை அதிகமாய் நேசிக்கவேண்டும். ஒருவன் கடவுளுக்கு தொண்டு செய்ய நினைப்பானானால் அவன் முதலாவது மனித சமூகத்துக்கு தொண்டு செய்தல் வேண்டும். அதன்பின் மனிதர்களுடைய அன்பை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் சம்பாதிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு பரமாத்மாவினிடத்தில் தொண்டுசெய்ய அருகனாகின்றான். பலாத்கார முறையில் சன்மார்க்கங்களை நிலைநிறுத்தாமல் சாந்த முறையிலும் காலவரையிலும் சன்மார்க்கங்கள் நிலவவேண்டும். இவைபோன்ற கோடிக்கணக்கான உபதேசங்களடங்கியிருக்கின்றன.

(4) கடவுளை வழிபடும் உன்னத கொள்கைகளை இஸ்லாம் மதத்திலிருந்து எல்லா மதமும் கற்றுணரவேண்டும்.

(5) ஒழுக்கங்களும், நன்னடக்கைளை அப்பியாசத்தில் கொண்டுவருவதற்குறிய தினசரி நிபந்தனைகளும், ஆடம்பர வாழ்க்கையின்றி அமைதலான வாழ்வும், மேன்மக்களும் கீழ்மக்களும் கடவுளை வழுபடுவதில் கலந்து ஒருவர்க்கொருவர் உதவிபுரிதல் கீழ்மக்களை எமாற்றுமல் தொழில்கள் மூலியமாய் பிழைக்கும் முறைகளை கற்பித்தல் முதலிய விஷயங்களை கிறிஸ்து மதத்தில் மற்றமதங்கள் கற்றுணரவேண்டும்.

(6) புண்ணிய பாவமென்ப தெல்லாம் இந்துமதத்தில்தான் உண்மையான விளக்கத்தோடு யுணர்த்தப்பட்டிருக்கிறது. தத்துவத்தோடு உயர்ந்தவேதப் பொருள்களை இந்துமதத்திலல்லாது வேறெந்த மதத்திலும் காண்பதரிது. ஜீவர்களுக்கு பிறவி யுண்டென்பதையும் மற்ற மதங்கள் மறந்துவிடமுடியாது. ஞானத்தி ஊற்றுகள் இந்துமதத்தில்தான் புறப்பட்டு ஓடுகின்றன.

(7) இந்துமதத்தின் உண்மை யறியாமல் வேறெந்த மதங்களும் பூர்ண ஞானியாய் நிலவுவது அருமையிலும் அருமை.

(8) மகம்மதிய மதத்தின் உயர்ந்த நோக்கங்களை யறியாமல் ஒருவனும் சிறந்த ஞானியாய் விளங்கமாட்டான்.

(9) கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் இந்துமதத்துக்கும் ஒரு சிறிதும் வித்தியாசமே கிடையாது. மாறுபாடலான கொள்கையும் கிடையாது. அவர் உபதேசமெல்லாம் உவமானமாகவே சொல்லியிருப்பதால் அவர் வாயிலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் அநேக உபநிஷத்துக்களில் அடங்கி யிருக்கின்றன. நால் மறுபிறப்பு, புலால் உண்ணுமை, மதுபானம், அவதாரிகை, மூர்த்தி விசேடம், கர்மயோகம், ஞானயோகம் முதலியவற்றின் உண்மைகள் அவரின் திவ்ய உரைகளில் பொலிந்து கிடக்கின்றன, நீங்கள் வேதத்தின் அர்த்தத்தை யறியக்கூடாத முறடர்களாயிருப்பதால் உவமையாக அறிவிக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிரூர். ஆகையால் கிறிஸ்துமதத்தின் உண்மை யறிதாதவன் சமரஸ ஒளியில் நிலைபெறமாட்டான்

வர்த்தமானத்திரட்டு.

மகாத்மா காந்தியடிகள் சமீபத்தில் தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்வதாக வதந்திகள் உலவுகின்றன.

2. வங்கநாட்டில் ஓர் காட்டுக்குச் சமீபத்திலிருந்த ஓர் குடிசையில் ஓநாய் புகுந்து பெண் குழந்தை ஒன்றை எடுத்துச்சென்று தன் குகையில் வைத்து வளர்த்துக்கொண்டிருக்கையில் சில நாட்கள் கழிந்து மறுபடியும் ஓர் குழந்தையை அவ்விதமே கொண்டுபோய் இரண்டு குழந்தைகளையும் ஒன்று 8 வயது மற்றொன்றுக்கு 4 வயது ஆகும் வரையில் வளர்த்துக்கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் வேட்டைக்காரர் வசம் அகப்பட்டு இப்பொழுது வங்காளத்தில் ஓர் பாதிரியார் வளர்த்துவருகிறார். சிறிய குழந்தை சில நாள் கழிந்து இறந்துவிட்டது. ஊளையிடுவதே அவர்களின் பாஷை. மிருகங்கள் நடப்பதுபோல் முட்டியிட்டு நடப்பதும், பேசுவதற்குப் பதிலாய் ஊளையிடுவதும், பச்சை மாமிசத்தையே புசிப்பதும், நாய் மாடு முதலியவைகளோடு விளையாடுவதும், சதா இருட்டிலிருக்க பிரியப்படுவதும், அந்தப்பிள்ளையின் இயற்கையாயிருக்கிறது. அந்தபெண்ணுக்கு 'கமலா' என்று பேரிட்டு, பாஷை கற்றுகொடுக்கப்படுகிறது. உயர்ந்த அறிவு படைத்த ஓநாயை முன் ஆலோசனையின்றியில் இவர்கள் துப்பாக்கியால் சுட்டுகொன்ற பின்னரே குழந்தையைக் கைப்பற்ற சௌகரியமாயிருந்ததாம். அந்தோ பாவம்! நமது மௌடீக பெண்மணிகள் குழந்தையை வளர்ப்பதில் துஷ்ட மிருகமாகிய ஓநாய்களிடத்தில் கற்று தெரியவேண்டும். மிருகங்களுக்கெல்லாம் எப்பொழுதும் சிறு குழந்தைகள்மீது ஆர்வமுண்டு யென்பதற்கு பல சான்றுகளுள்ளன.

(3) புதிதாக வந்திருக்கும் கனம் தங்கிய ராஜப்பிரதிநிதியவர்கள் வேளாண்மையில் மிகுந்த நிபுணரென்றும் தான் வேளாளருக்கு உதவிசெய்வதில் மிகுந்த பிரயாசை யெடுத்துக்கொள்ளப்போவதாயும் பல இடங்களில் பிரசங்கித்து வருகின்றார். அஃதுண்மையாயின் இப்பஞ்சகாலத்துக்கு ஏழை குடியானவர்களின் பகுதிப் பணத்தை நீக்கி அவர்களுக்கு வெளியிடங்களிலிருந்து அரிசி தருவித்து இலவசமாக விநியோகிக்கலாமே? இன்னும் அநேக விஷயங்களில் உதவிபுரியலாம். உண்மை அநுதாபமாயின் சமீபத்தில் பலனளிக்கும். பார்ப்போம்?

(4) ஆகாய விமானப் போக்குவரத்து இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உலகத்திலுள்ள பல பெரிய பட்டணங்களுக்கும் போக்குவரவுக்குரிய சாதனமாக சென்ற டிசம்பர்மாதக் கடைசியிலிருந்து நடைபெறுகின்றன. ஆப்பிரிக்கா கண்டத்தில் எகிப்து தேசத்திலிருக்கும் கேய்ரோ பட்டணத்திலிருந்து இந்தியாவிலுள்ள காராய்ச்சிக்கு முதல் முதலாவது டிசம்பர்மீ 27தேதி புறப்பட்டு காராய்ச்சிக்குவந்து பிறகு டில்லிமாநகருக்கு வந்ததாம். இது ஐரோப்பியா, ஆப்பிரிக்கா, ஆசியா, முதலிய கண்டங்களிலுள்ள பெரிய ராஜதானி பட்டணத்துக்கு மாத்திரம் போக்குவரத்துக்கு சாதனமாயிருக்கும்.

(5) பழைய ஜப்பானிய சக்கிரவர்த்தி திரேக அசௌக்கியத்தினுல் விண்ணுலகை எய்தினர். அவருக்கு பதிலாக புதிய ஜப்பானிய அரசர் சிம்மாசனம் வகித்துள்ளார்.

எரிமலையின் உக்கிரம்.

வெஸுவியஸ் என்பது இட்டாலி தேசத்திலுள்ளதோர் எரிமலை அது சில தினங்களாக வெடித்துக் கற்குழம்பைச் சிகரத்தின் வழியாகக் கக்கிக்கொண்டிருக்கிறதாம். சுமார் ஒரு மைல் தூரத்திற் கற்குழம்பானது ஆறுபோல் ஓடிக்கொண்டிருப்பதைப் பலர் ஆச்சரியத்துடன் பார்த்துவருகிறார்களாம்' இன்னும் ஒரு வருஷ காலத்திற்குள் நேயில்சு நகரிலிருந்து பார்த்தால் வெஸுவிஸ் மலைச்சிகர வெடிப்பு நன்றாகத் தெரியுமாம்.

சமரச சம்பளம்.

கப்பலில் வேலைசெய்யும் லஸ்கர்களுக்கான சங்கமொன்று ஐரோப்பாவிலுள்ள ஆண்ட்வர்ப் நகரில் ஸ்தாபிதமாயிருக்கிறது. பிரிட்டிஷ் கப்பல்களிலும் ஜர்மானியக் கப்பல்களிலும் வேலை செய்வதற்காக இணங்கிக் கையொப்ப மிட்டிருக்கும் இந்திய லஸ்கர்களுக்கு, ஐரோப்பிய லஸ்கர்களுக்குக் கொடுபடும் சம்பளமே அளிக்கப்படுமென்று தெரியவருகிறது.

கைதிகள் விடுதலை யடைந்தனர்.

ஜப்பான் தேசத்துப் புதுச் சக்ரவர்த்தி சிம்மாஸனமேறிய வைபவத்தைக்குறித்து 50,000 குற்றவாளிகள் சிறைக்கூடத்திலிருந்து விடுதலையானுர்கள்.

1,800 மைலிற்கும் டெலிபோன்

கல்கத்தாவுக்கும் டில்லிக்கும் புதிதாக அமைக்கப் பெற்ற டெலிபோன் யந்திரத்தைப் பொது ஜனங்கள் உபயோகிக்கலாமென உத்திரவாயிருக்கிறது. ஒருதடவை 3 நிமிஷம் பேசுவதற்கு ரூ. 5 கட்டணம் செலுத்த வேண்டியது. இரவு 9 மணிக்கு மேல் பேசுகிறவர்களிடமிருந்து அரைக் கட்டணம் வாங்கப்படுமாம். இந்த இரண்டு நகரங்களுக்கு மிடையிலுள்ள தூரம் 1,800 மைலாகும்.

* * *

நிலக்கரியிலிருந்தும் எண்ணெய்.

நிலக்கரியிலிருந்து எண்ணெய் உண்டாக்கும் ஒரு புதுவகையை ஜெர்மெனியர் கண்டு பிடித்திருக்கிறார்களாம் 1 டன் நிலக்கரியிலிருந்து 107 காலன் முதல் 125 காலன்வரை எண்ணெய் எடுக்கலாமெனப் பரிட்சைசெய்து பார்க்கப் பட்டது. மோட்டார் வண்டிகளுக்கும், பற்பலயந்திரங்களுக்கும் இவ் வெண்ணெயை உபயோகப்படுத்தக் கூடுமாம்!

* * *

புதிய ஆகாயவிமான கம்பெனி.

ககன மார்க்கத்தை விருத்தி செய்வதற்காக ஸெக்கோஸ்லொவேகியாவில் ஒரு புதிய கூட்டுக் கம்பெனி ஏற்பாடாயிருக்கிறது. அதன் மூலதனம் ஐம்பதினாயிரம் மூலமாகப் பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச்செல்ல அக்கம்பெனியார் முனைந்துபோதுமான விமானங்களைக்கட்டி முடிக்கப் பிரயத்தனிப்பார்கள்.

* * *

"வல்கேனியா" கப்பல்.

24,000 டன் பாரமேற்றிக் கொள்ளக் கூடிய வல்கேனியா கப்பல் தென்னாப் பிரிக்காவுக்குப்போய்வர அமர்த்தப்பட்டிருக்கின்றது. அதில் 2100 பிரயாணிகள் ஏறிச்செல்லமுடியும். மணியொன்றுக்கு 22-மைல் போகக்கூடியது இப்போதே இதைக் கடலில் விட்டிருக்கிறார்கள்.

* * *

ஜர்மன் மந்திராலோசனை ஸபைத் தலைவர்.

ஹர்லாப்என்பவர் ஒருபெரிய மைதானத்திலேபல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு நடுவில் நின்று பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது அருகில் ஓடிக்கொண்டிருந்தடிராம்வண்டியினின்று ஒருவன் அத்தலைவரை நோக்கிச் சுட்டான், நல்லவேளையாய் அந்த ரவை தலையை உராய்ந்து சென்றது. சுட்டவனைப் பிடித்துவிட்டார்கள்.

* * *

தீர்க்காயுசுள்ள தன்யர்கள்.

ஒருவனுக்குத்தீர்க்கரயுள்என்றால் நூறு வருஷகாலம் ஜீவித்தவன் என்று சாதாரணமாக நாம் கருதுகிறோம். அமெரிக்கா ஐக்கியமாகாணங்களிலே 100வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏறக்

குறைய 400பேர் இருப்பதாகக் கணக் கெடுத்திருக் கிறார்கள். இவர்கள் தீர்க்காயிசு பெற்ற தன்யர்களாவர்.

சாமி சிரத்தானந்தனர் ஸ்லாமிவாலிபன் ஒருவன் படுக்கையிலிருக்கும்போது சுட்டுவிட்டான் இந்து மதத்துக்கே தாய் போன்ற பணிவிடை செய்த நமது மகானை இழந்ததற்காக வருந்துகிறோம் இவர் மரணத்தால் இந்தியாவுக்கே பெருத்தநஷ்டமேற்பட்டிருக்கிறது.

* * *

அடுத்த காங்க்ரெஸ்.

கோஹத்தில் 41-வது இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் கூடி இப்போது முடிந்தது. 42-வது காங்க்ரெஸ் மகாசபை சென்னையிற் கூடும்.

* * *

லைப்ரெரிகளுக்குப் பணவுதவி.

இச்சென்னை ராஜதானியிலுள்ள பற்பல ஜில்லாக்களில் வைத்து நிர்வகிக்கப்பட்டு வருகின்ற லைப்ரெரிகள் எனும் புத்த காலயங்களுக்கும் மற்றும் பல கிரந்தங்களைச் சமர்பிக்கும் நோக்கத்துடன், அவ்வந்தப் புத்தகாலயங்களுக்குத் தகுந்தவாறு பணவுதவி செய்ய வேண்டுமென்று கல்வி இலாகாத்தலைவர் சிபார்சு செய்திருந்தார். அதை யனுசரித்து எல்லா லைப்ரெரிகளுக்குமாகச் சென்னை கவர்ன்மெண்டார் பதினாயிரம் ரூபா சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

* * *

டில்லியில் ஆகாயப்படை காட்சி

டில்லியில் பிப்ரவரி 21ந்தேதி நடைபெற்ற ஆகாய விமானக் காட்சியின் விமான ஓட்டப்போட்டியில் 70 ஆகாய விமானங்கள்போல் கலந்துகொண்டன. அக்காட்சி இங்கிலாந்தில் நடத்தப்படும் காட்சிக்குச் சமமாக விருந்தது. அதில் எல்லாவிதமான எஞ்சின்களுள்ள விமானங்களும் காணப்பட்டன. இந்தக் காட்சியினால் கிடைத்த பணம் ஆகாயப் படையிலிருந்தவர்களின் அநாதைகளான விதவைகள் குழந்தைகள் முதலினோரின் கஷ்ட நிவர்த்திக்காக உபயோகிக்க படும்.

* * *

மணிக்கு 81 மைல்

பிரான்சி லுள்ள எலக்டிரிக் ரயில்வே 400 டன் பாரத்தை 16 சக்கிரமுள்ள எலக்டிரிக் என்ஜின் மணி 1-க்கு 81 மைல்வீதம் இழுத்துச் செல்லுகின்றது.

* * *

60லக்ஷம் ரூபாய்க்கு யந்திரங்கள்

மேட்டூர் திட்டத்திற்கு ஏற்கனவே வாங்கப் பட்டிருக்கும் மெஷின்களும் இனிமேல் வரப் போகிறவையுமாகச் சுமார் 50 60லக்ஷம் ரூபாய் பிடிக்குமெ

ன்று தெரிகிறது. மேட்டூரில் வேலை துரிதமாக நடந்து வருகிறது. மெஷீன்களை உபயோகிப்பது வேலையைத் துரிதப்படுத்தி வருவதாகக்கூறப்படுகிறது. சூபரின்டெண்டிங்இஞ்சினீர் மிஸ்டர் ராபர்ட் கவர்ன் மெண்டோடு மெஷீன்களைப்பற்றி யோசிப்பதற்காக சென்னைக்கு வந்தார்.

* * *

மோட்டார்பஸ் விபத்து.

கொட்டாரக் கரைக்கும் கோட்டயத்திற்கும் ஜெம் மோட்டார் ஸர்விஸ் உண்டு. இதைச்சேர்ந்த பஸ் ஒன்று கடந்த வியாழக்கிழமை பகல் ஒன்றரை மணிக்குப் பிரயாணிகள் சகிதம் வேகமாய்போய்க் கொண்டிருந்தபோது வளைவாயிருந்த தோரிடத்தில் மோதுண்டது. வீற்றிருந்த பிரயாணிகள் அனைவரும் பஸ்ஸிலிருந்து தரையில் எறியப் பெற்றார்கள். பஸ்ஸுக்குச் சேதம்; ஆனால் பிரயாணிகளுக்கு உயிர்சேதமேதுமில்லை, பஸ்வண்டிகள் அதிவேகமாகப்போகாது மெதுவாகப் போகவேண்டுமென்பதற்கு இவ்விபத்து ஓர் எச்சரிக்கையாயிருக்குமாக.

* * *

ரைன்லாந்துத் துருப்புகள்.

ஜர்மனியைச் சேர்ந்த ரைன் பிரதேசத்திலே பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் பிராஞ்சிய, பெல்ஜிய, பிரிட்டிஷ் துருப்புகளின் சங்கியை 71,000.

பொள்ளாச்சி ஆனைமலைரயில்வே

பொள்ளாச்சியிலிருந்து தெற்காக 23-மைல் தூரம் ரெயில்வே லையன்போட்டு ஆனைமலை கயறு பாதையோடு சேர்ப்பிப் பதையொட்டிப் பொள்ளாச்சி-ஆனைமலை லைட்ரெயில்வே கம்பெனியொன்று ஸ்தாபிதமாகிக்கடந்த அக்டோபர் மாதம் 25-ல் ரிஜிஸ்தர் செய்யப் பட்டதா யறிகிறோம்.

* * *

கட்டாயக் கல்வி.

யுனைடெட் பிராவின்ஸெஸ்ஸிலுள்ள முனிசிபாலிடிகள் பலவற்றுள் இளைஞர்களுக்கு ஆரம்பக் கல்விக் கட்டாயப்படுத்தப் படவேண்டுமென்று முயற்சித்து வருகிறார்கள். இவ்விதம்முயன்று கட்டாயக்கல்வியை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்ற யுனைடெட் பிராவின்ஸெஸ் முனிசிபாலிடிகளின் சங்கியை 25.

* * *

ஆஸ்திரேலியாவில் தீவிபத்து.

க்யோகோள் என்பது ஆஸ்திரேலியாவி லுள்ளதோர் பட்டணம். அதில் 15-வியாபார கம்பெனிகள் சமீபத்தில் தீயினல் பஸ்மீகரமாயின. ஏற்பட்ட தேசமோ நூறாயிரம் பவுனும். 'எரிகிறவீட்டில் பிடுங்கியது லாபம்' என்னும் பழமொழிக் கிணங்க, கொள்ளை களும் நடந் தேறினவாம்.

கொலைக்குக் கொலை.

பணங் கொடுத்துப் பிறரால் தூண்டப்பெற்ற பர்க்காடி என்பவன் கடந்த பிப்ரவரி ௴ 21-ந் தேதி நாரான்சிங் என்பவனை வட இந்தியாவிலுள்ள காலி ஸ்டேஷனுக் கருகில் அழைத்துப் போய் கூரியதோர் சூரிகையினால் வழிமறித்துக் கழுத்தறுத்து, உடலை இருப்புப்பாதையிற் போட்டுவிட்டான். இக் கேஸ் இதுவரையில் நடந்து பிரோஸ்பூர் ஸெஷன் ஜட்ஜவர்கள்கடந்த 25-ந்தேதியன்று மேற்படி பர்க்காட்டி யென்றும் கொலைபாதகனுக்கு மரண தண்டனை விதித்தார். இந்துநேசன்.

* * *

சர்வே செய்யும் விமானி.

போர்னியூ தீவிலிருந்து வின்ஸென்ட் என்னும் பெயர்கொண்ட ஆகாய விமானி நேற்று முன் தினம் ரங்கூன் போய்ச்சேர்ந்தார். மலைப்பிராந்தியங்களில் விமானங்களை நடத்துவிக்க முடியுமாவென்பதை ஸர்வேசெய்வதற்காக அவர் புறப்பட்டிருக்கிறார். அடிக்கடிசர்வேசெய்தால் இறுதியில் பலன்தானாகவே லபிக்கும்.

* * *

நூல்நூற்கும் சர்க்காக்கள்'

தேசோத்தாரணத்திற்கு நூல் நூற்பதேசரி. இதை நம்தேசப் பெண்மணிகள் சிரமமில்லாமல் வீட்டிலுட்கார்ந்தபடியே செய்யலாகும் பாடசாலைகளிற் படிக்கும் பாலிகைகளுக்கு நூல் நூற்கக் கற்றுக்கொடுத்தால்பிற்கால வாழ்வுக்குப் பேருபகாரமாயிருக்குமென்று பெரியோர்கள் கருதுகிறார்கள் அதையேசென்னைப் பிரதம மந்திரியான கனம் டாக்டர் சுப்ராயன் அவர்கள் சமீபத்தில் திருச்செங்கோடுக்குப் போயிருந்தபோது அங்குள்ள பாலிகா பாடசாலைக்கு ஆறு சர்க்காக்களைச் சன்மானமா யளித்தார்.

* * *

"வல்கேனியா" கப்பல்.

சொத்துக்காக விஷமாம்.

ஐயோ பாவம்! திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த திருவல்லாவுக்கருகில் இருக்கும் கள்ளுபாராவில் ஸ்திரீ யொருவளுக்கு விசேஷ சொத்து சேரப்போவதை முன்னிட்டு அவளுக்கும் அவளது இரண்டுவயதுகுழந்தைக்கும் விஷமிடப்பட்டதாகவும் ஸ்திரீ உடனே மாண்டுபோனதாகவும் செய்தி எட்டுகிறது.

* * *

அமெரிக்கப் பிரயாணிகள்.

ஏறக்குறைய 80 அமெரிக்கப் பிரயாணிகள் உலகத்தைச் சுற்றிப் பார்க்கும் உத்தேசத்துடன் புறப்பட்டு வந்திருக்கிறார்கள் நேற்று முன்தினம் காலை சென்னை வந்தவர்கள் அன்று சாயங்காலம் கொழும்புவுக்கு ஸ்பெஷல் டிரெயினில் புறப்பட்டார்கள்.

ஆத்ம சக்தி.

முன் பத்திரிகையில் ஆத்மசக்தி வாய்தவர்களின் சிலரை குறிப்பிடுவதாக எழுதியிருந்தோம். ஆத்மசக்தி வாய்ந்தவர்களில் பால பக்தர்களே முதலாவர். துருவன், மார்க்கண்டேயர், பிரகலாதன், சீராளன் முதலியவர் ஐந்துவயதும் அடையப்பெறாதவர்கள். ஐந்தும் மூன்றும் எட்டு என்று தெரியாத பாலகராயிருந்தும் அவர்களின் மனத் திண்ணத்தை மாற்றுவதற்கு தேவர், அரக்கர், மனிதர் முதலிய யாவராலும் இயலாமல் போனதை மறந்திருக்க மாட்டீர்கள். அரிச்சந்திரன், பலிச்சக்ரவர்த்தி, கர்னன், கிருஷ்ணன், காந்தி முதலியவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி, மூன்றையும் இழக்க நேர்ந்த சமயத்திலும் அஞ்சாமனத்தராய் தங்கள் ஆத்மசக்திபை இழந்தார்களில்லை. அரிச்சந்திரன் ஸ்ரீ இராமானுஜாச்சாரியார் பரகெதியே தங்களுக்கு இல்லையென்று சொன்னாலும் அப்பொழுதும் தாங்கள் ஒழுகும் நன்னெறியை நெகிழவிட மாட்டோம் என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார்கள். பலிச்சக்கிரவர்த்தி, மகாவிஷ்ணு தன்னை பாதாள லோகத்திற்கு அழித்திவிடப் போகிறாறென்று சுக்கிரனால் அறிந்திருந்தும் அவரது நோக்கத்திற்கு தனதுமனச்சாயலை திருப்பவில்லை. தங்களுடைய தபம் தானம் முதலியவைகளை இரந்தவர்களிடத்தும் மனதார கொடுத்தவர்கள் கர்னன், விஸ்வாமித்திரன் முதலியவர்கள். பார்த்தீர்களா! ஒருவர் தனது திரேகப் பிரயாசையினால் மற்றவர்க்கு உபகாரம் செய்தே அருமை. தங்கள் பொருள்களினால் உபகாரம் செய்வது அதிலும் அருமை. தங்கள் உயிரை பிறருக்காக கொடுத்து காப்பாற்றுவது அதைக்காட்டிலும் அருமை. உலகத்து உயிர்கள் இந்த வையகத்தில் நாம் எவ்வளவு கஷ்டமுற்றபோதிலும் மேலோகத்திலாவது நன்மையை பெற மாட்டோமா என்னும் ஆசையைக் கொண்டு பல தர்மங்களை யாற்றுவது உலக இயற்கை;

தேவர்களும், மனிதர்களும், பாவிகளும், யாவர்களும் முடிவாக விரும்பத்தக்க மோக்ஷ காமியத்தை வேண்டாமென்று வெறுக்கத்தக்கவர்கள் எல்லாவற்றிலும் அருமையிலுமருமை. மேற்கூறியவர்களெல்லாம் ஆத்மசக்தி வாய்ந்தவர்களே. அக்காலத்தில ஆத்மசக்தி வாய்ந்தவர்களில் கிருஷ்ண பரமாத்மாவே தலையாவர்.

இக்காலத்தில் ஆத்ம சக்தி வாய்ந்தவர்கள் பலர் உள்ளார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் மகாத்மா காந்தியடிகளே. அடுத்தபத்திரிகையில் மாந்திரீக சக்தியை கற்றுக்கொள்ளும் விபரத்தை வெளியிடுவோம்.

தமிழ் பெருந் தகையீர்!

நமது சமரஸ தேவி அக்ஷய ௵ ஆடி ௴ ஆரம்பித்து பிரபவ ௵ பங்குனி ௴ வளாயில் ஒருவருஷசந்தாவுக்கே அனுப்பி வருவதாக ஏற்படுத்தியிருக்கிறோம். நமக்கு பெரும்பாலும் சந்தாதார்கள் குடியானதர்களே! அவர்களுக்கு தற்காலம் மழையில்லாமையால் நீண்டகஷ்டங்களுக்கு இடையில் சந்தா வசூலிப்பது சிறமமாக முடிகிறது. இதனால் அடுத்த வருஷம்வரைக்கும் இதே சந்தாவுக்கே அனுப்புவதாக ஏற்படுத்தியிருக்கிறோம். எவ்வளவுக்கெவ்வளவு எங்களுக்கு சிரமமில்லாமல்சந்தா தொகையைமுன்னாடியே கட்டிவிடுகிறீர்களோ அவ்வளவு ஒழுங்காகவும் பெரியரூபந்தாங்கி வெளிவரும். பத்திரிகை தாமதித்து வருவதினால் பல அன்பர்களுக்கு வருத்தம் ஏற்பட்டிருக்கலாம். ஏஜண்டுவந்தவுடனே திடீரென்று கொடுத்து விடுகிற பணமானது 20 தினம் இழுக்கவைத்து கொடுக்கவோஇல்லை யென்று மறுக்கவோசெய்கிற புண்ணியவான்களால் ஏற்பட்டசிலவுக்கு சமதியாகிவிடுகிறது வி பி. அனுப்பினால் பெரியமனிதர்கள் கௌரவத்தற்காக அங்கு கட்டிவிடுகிற பணம் பத்துவிசை நேரில் சொல்லியும் வி. பி. அனுப்பும்படி கை யெழுத்திட்டும் பிறகு வி. பி. அனுப்பும்போது திருப்பிவிடுகிற நயவஞ்சக புண்ய ஆத்மாக்சளின் சிலவுக்கு நேராகிவிடுகிறது. நமது நாட்டின் வழக்கம் அவ்வாறுயிருப்பதினால் இதுவரைக்கும் கட்டியிருக்கும் சந்தாதார்கள் எமது கஷ்டத்திலும் சிறிதுபகிந்து கொள்வரென வேண்டுகிறோம் இனிமேல் கூடியவரையில் ஒழுங்கு பெற நடைபெறும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளிநாடுகளுக்கு ரூபாய் 1—4—0 தனிப் பத்திரிகை அணா 2.

சந்தாவை மணியார்டர் செய்தால் ரூ 1—2—0 தான் ஆகும் வி. பி. யில் அனுப்புவதில் ரூ. 1—5—0 ஆகும் விலாசம் மாறும் போது தெரிவிக்கவேண்டும். ☞ எல்லாகடிதங்களும், மணியார்டர்களும், போஸ்டல் ஆர்டர்களும், அடியில்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

எம். ஏ. வரதராஜ முதலியார்.

மானேஜர், சமரஸம் ஆபீஸ், விழுப்புரம்

THE REGISTRAR
1927
MADRAS

ஜோதிடம்! ஜோதிடம்!!

உங்களுடைய எதிர்கால சம்பவங்களை தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியானால் அடியில்கண்ட விலாசத்துக்கு ஐந்து ஆறு கேள்விகளை எழுதி கவருக்குள் வைத்து சீல்செய்து அனுப்புங்கள். மறு தபாலில் உங்கள் சீல் கவருடன் கவருக்குள் நீங்கள் எழுதிய கேள்விகளின் பதிலும் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் களவு சட்டவிரோதமான கேள்விகளை எழுதக்கூடாது. பரீக்ஷை செய்யக்கூடிய கேள்விகளுக்கு பதில் எழுதப்படமாட்டாது. கவரின்மேல் நீங்கள் பிறந்த வருஷ, மீ, தேதி, நாழிகையாவது கேள்வி எழுதிய நேரமாவது கட்டாயம் எழுதவும்.

1 முதல் 5 கேள்விகளுக்கு ரூ. 1. (ஒன்று) 5-க்குமேல் பிரதிகேள்விக்கும் அணா 8. தசாபுக்தி அந்தரம் வாரியாக ஒருவருஷ பலன் எழுதியனுப்ப ரூ. 5 (ஐந்து). கோசாரபலன் 1 வருஷத்திற்கு அணா 10. வெளிநாடுகளுக்கு இரட்டிப்பு கட்டணம்.

நற்சாட்சிப் பத்திரங்கள்.

(1) கோயில்குண்டலா கர்னூல் 5—2—1923

அன்புள்ளஐயா, தாங்கள் எனக்கு 1923-ம் வருஷம் ஜனவரிமீ 17உ 1152 நெ. கடிதத்தில் எழுதியனுப்பியபடியே நான் மாக்காபூரிலிருந்து கோயில்குண்டலாவுக்கு மாற்றப்பட்டேன்

(ஒப்பம்) சி. துரைசாமி நாயுடு,
போலீஸ் சர்கிள் இனிஸ்பெக்டர்.

(2) 396, நெ, 3-வது மெத்தை, தங்கசாலைதெரு, சென்னை 9—6—23.

எனதருமை நண்பருக்கு, எனது தற்கால நிலமையைப்பற்றி தாங்கள் எழுதியது எல்லாம் சரியே. தவிர ஜூன்மீ முதல் 18உ வரையில் தாங்கள் சொல்லியபடியே நடக்கின்றன. பிற்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களை முற்கூறி அபாயங்களிலிருந்து ஜனங்களை தப்பும்படி தாங்கள் செய்வதை நான் ரொம்பவும மெச்சுகிறேன்

(ஒப்பம்) ஸ்ரீனிவாச பகவத்ஸ்வாமி

(3) ஜக்ஜிவன் தயால் பங்களா, காட்கோபார் 31—12—1922.

ஐயா, நான் எழுதியனுப்பின ஐந்து கேள்விகளுக்கும் சரியானபதில் அனுப்பியதற்கு ரொம்பவும் சந்தோஷம். தாங்கள் பதிலைப்பார்த்து ரொம்பவும் திருப்தியடைந்தேன்.

(ஒப்பம்) தனேசுவரவஜீராய்.

விலாசம்:-T.S. கிருஷ்ணசாமி அய்யர், ஜோதிஷர்,
விழுப்புரம் போஸ்டு, S. I. Ry.,